PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED THIRU. B. SYEDNAZAR BABULAL GREY GRANITE QUARRY S.F. NO: 373/1A, 373/1B(P) LEASE OVER AN EXTENT OF 1.10.0 HA IN CHENDARAPALLI VILLAGE, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT ON 20.04.2022 AT 11.00A.M AT M/S. M/S.SRI MAHESHWARI MAHAL, THIRUVANNAMALAI MAIN ROAD, ANJUR, BARGUR TALUK, KRISHNAGIRI DISTRICT - 635 203.

Present:

1	Tmt. S.Rajeswari	:	District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri)
2	Dr. M Senthilkumar.,	:	District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District
3	Mrs.K.Sumithrabai	:	Assistant Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District
4	Thiru. V Rangasamy	:	Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District
5	Thiru. B. Syednazar Babulal	:	Leaseholder Thiru. B. Syednazar Babulal Grey Granite Quarry
6	Thiru.S.Suriyakumar	:	EIA Consultant M/s.Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd, Salem.
	Public	:	55 Nos. (List enclosed as Annexure)

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the District Revenue Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all general public and project proponent who have attended the public hearing for the proposed Grey Granite Quarry lease over an extent of 1.10.0 Ha for the unit of Thiru. B. Syednazar Babulal Grey Granite Quarry, S.F. No: 373/1A, 373/1B(P) lease over an Extent of 1.10.0 Ha located at Chendarapalli Village, Bargur Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinakaran" and "New Indian Express" dated 12.03.2022 and informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The District Revenue Officer, Krishnagiri has initiated the Public Hearing process. Further, the District Revenue Officer, Krishnagiri requested the project proponent to explain about their proposed project through power point presentation about the proposed Grey Granite quarry project and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s.Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem of the proposed Grey Granite Quarry project over an extent of 1.10.0 Ha for the unit of Thiru. B. Syednazar Babulal Grey Granite quarry has made presentation about the proposed Grey Granite quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur,

Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed Grey Granite quarry project. The views and suggestions of the public are detailed below:

1. **Thiru Ramachandiran, Thogarapalli Village:**

Question No 1

Thiru.Ramachandran asked that what will be the maximum magnitude of vibration generated during the quarry operations and whether it will be more or lesser in nature.

Reply:

Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem replied that the conventional rock blasting activity is replaced by new technology methods like wire saw cutting. In this method, the vibration will not exceed the level of 0.5 Richter scale. So, the vibration due to quarrying activity will not affect the environment and surrounding area.

Question No 2

Thiru.Ramachandran asked that what are the benefits to the village by this proposed project.

Reply:

Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem replied that estimation of proposed quarry is 212.04 lakhs. In that Corporate Social Responsibility (CSR) fund of Rs.4.2 lakhs will be spent to the infrastructure development of local Government School by providing Fan, Chair, Toilet Facility, Sanitary napkins and Incinerators.

Question No 2

Thiru.Ramachandran asked that what kind of employment opportunities will be offered by the proposed project.

Reply:

Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem replied that the employment opportunities will be created in the fields of drilling, cutting, crane service and supervising, for about 34 direct employment opportunities will be created for the local people and also the indirect employment opportunities will be created for some of the people who will start other jobs dependent of proposed quarry.

2. **Tmt. B. Jagitha, Jagadevi Village:**

Tmt. Jagitha asked what are the Air Pollution Control measures to be taken for controlling of dust generated from quarrying activity?

Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem replied that the water sprinkling system will be used to suppress the dust emanation during the quarry activities.

3. **Tmt. Lakshmi Priya, Anjur, Panchayat Union Vice President**

Question No.1

Tmt. Lakshmi Priya stated that there was no mention about benefit of Chendarapalli village people even though they mentioned the infrastructure of local schools will be improved for the previous question asked by some person and she requested that it will be very useful if they arranging RO plant for treating the Bore well water because the water extracted from the past three Bore wells contained more amount of salt in nature. .

Reply

The project proponent Thiru. B. Syednazar Babulal Grey Granite Quarry has assured that they will install the RO System in the village to treat the Bore well water.

Question No.2

Tmt. Lakshmi Priya stated that the Corporate Social Reasonability (CSR) funds had not been utilized properly by the quarry units which was mentioned in the respective public hearings conducted previously.

Reply:

The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur requested her to give petition against the above said quarry units and action will be taken based on the petition.

4. Thiru.Mullaivendhan, Anjur Village

Thiru. Mullaivendhan said that the Corporate Social Responsibility (CSR) fund to be used for only School and it will not benefit the whole village people so that he requested to provide the Corporate Social Responsibility (CSR) fund to the village panchayat in order to spend the CSR fund in various village development programmes.

Reply:

Thiru.S.Suriyakumar EIA Consultant, M/s. Aadhi Boomi Mining & Enviro Tech (P) Ltd and Mining Solutions, Salem replied that the project management has proposed the CSR fund of Rs.5 Lakhs to be used for infrastructure development of school and other welfare schemes. Further, the proponent has assured to implement other welfare activities for the village people through village panchayat after commissioning of quarry in future.

Conclusion:

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography / Audio and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, One number of petition was received on the proposed B.Syednazar Babulal Grey Granite quarry project during the public hearing meeting. The petition is enclosed herewith.

Further, it is informed that there is no written representation /E-mail received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public about the views/comments/complaints on the proposed Grey Granite quarry projects.

List of publics attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur.	District Revenue Officer Krishnagiri	District Collector, Krishnagiri.

திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி, ச.எண்.373/1A, 373/1B(P), செந்தாரப்பள்ளி கிராமம், பருகூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமையவுள்ள உத்தேசிக்கப்பட்ட கிரே கிரானைட் குவாரி 1.10.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 20.04.2022 அன்று திருவண்ணாமலை மெயின் ரோடு, அஞ்சூர், பருகூர் வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ மகேஸ்வரி மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:

பங்கேற்றோர்:

1	திருமதி. S. ராஜேஸ்வரி	:	மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர் கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி)
2	Dr.மு.செந்தில்குமார்	:	மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்.
3	திருமதி. க.சுமித்ராபாய்	:	உதவி சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்.
4	திரு.வீ.ரங்கசாமி	:	உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்.
5	திரு. பி.சையத்நாசர் பாபுலால்	:	குத்தகைதாரர் திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி
6	திரு S.சூர்யகுமார்	:	சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர், தி/ள். ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம், தமிழ்நாடு.
	பொதுமக்கள்	:	55 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது)

திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி மற்றும் வருவாய்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரியின் குத்தகைதாரர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினகரன்" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" ஆகியவற்றில் 12.03.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக குவாரி குத்தகைதாரரின் சார்பாக அவருடைய திட்ட ஆலோசகர் குவாரி திட்டம் பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும், அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள் மற்றும் விளக்கங்களை கேட்கலாம் என்றும், இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிநாடா மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் / தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட வருவாய் அலுவலர், கிருஷ்ணகிரி அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்து, கிரானைட் குவாரி திட்டத்தின் குத்தகைதாரரை உத்தேசிக்கப்பட்டுள்ள கல்சுரங்கம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

பின்பு திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.S.சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று கிரானைட் குவாரி திட்டத்தில் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் பவர்பாயின்ட் விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

பொதுமக்கள் கருத்துகேட்பு:

1. திரு.ராமசந்திரன், தொகரப்பள்ளி,

கேள்வி எண் 1

திரு. ராமசந்திரன் அவர்கள் இக்குவாரி திட்டத்தினால் நில அதிர்வுகள் எந்த அளவில் இருக்கும் என்றும் அவை இந்த சுற்று வட்டாரத்தில் அதிகமாக இருக்குமா? அல்லது குறைவாக இருக்குமா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி, நிறுவனத்தின் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் பாறைகளை வெட்டி எடுப்பதற்கு வெடிகள் வைப்பதற்கு பதிலாக தற்போது நவீன முறையான வயர்

அறுப்பு முறையின் (Wire Saw Cutting) மூலம் பாறைகள் வெட்டப்படுவதால் 10 விழுக்காடு அதிர்வுகள் கூட உருவாக வாய்ப்பில்லை எனவும் அதிர்வு எண் அளவானது 0.5 ரிக்டர் அளவுக்கும் குறைவாகவே இருக்கும். ஆகவே, அதிர்வானது பாதிக்கும் வகையில் ஏற்படாது என்று பதிலளித்தார்.

கேள்வி எண் 2

திரு. ராமசந்திரன் அவர்கள் இக்குவாரி திட்டத்தினால் கிராம மக்களுக்கு என்ன நன்மைகள்? ஏற்படும் என்று கேள்வி எழுப்பினார்.

நிறுவனத்தின் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் இக்குவாரி திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 212.04 இலட்சம் எனவும் அதில் சமூக பொறுப்பு திட்ட நிதியானது (Corporate Social Responsibility) ரூபாய் 4.2 இலட்சம் ஆகும். இந்த தொகையானது, இவ்வூரில் உள்ள பள்ளி குழந்தைகளுக்கு செலவிடப்படவுள்ளது. மேலும், பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளான மின்விசிறி, நாற்காலி, கழிப்பிட வசதி, சானிட்டரி நாப்கின் மற்றும் அவற்றை எரிப்பதற்கான சாதனம் (Fan, Chair, Toilet Facility, Sanitary napkins and Incinerators) போன்றவற்றிற்கு செலவிடப்படும் என்று பதிலளித்தார்.

கேள்வி எண் 3

திரு. ராமசந்திரன் அவர்கள் இக்குவாரி திட்டத்தினால் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்குமா? என்று வினா எழுப்பினார்.

இதற்கு திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி நிறுவனத்தின் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் இக்குவாரித்திட்டத்தின் மூலம் நேரடி வேலைவாய்ப்பானது அதாவது துளையிடுதல், வெட்டி எடுத்தல், கல்உடைப்பு, கிரேன் சர்வீஸ் மற்றும் மேற்பார்வையாளர் என மொத்தம் 34 பேருக்கு

நேரடி வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்றும் இக்குவாரி சார்ந்து சில நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்று பதில் அளித்தார்.

2. திருமதி. B. ஜாகிதா, ஜெகதேவி

திருமதி. ஜாகிதா அவர்கள் குவாரி செயல்பாட்டின் பொழுது உருவாகும் காற்று மாசு எவ்வாறு கட்டுப்படுத்தப்படும் என்று வினவினார்?

நிறுவனத்தின் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் குவாரி பணிகள் மேற்கொள்ளும்பொழுது ஏற்படும் காற்று மாசு துகள்களை கட்டுப்படுத்த தற்பொழுது நவீன முறையில் நீர்த்தெளிப்பான்(Water Sprinkling) அமைப்பு மூலம் தண்ணீர் தெளிப்பதால் தூசு எழும்பவது கட்டுபடுத்தப்பட்டு, காற்று மாசு ஏற்படுவது குறைக்கப்படும் என தெரிவித்தார்

3. திருமதி. லெட்சுமி பிரியா, அஞ்சூர், ஊராட்சி மன்றத் துணை தலைவர்

கேள்வி எண் 1 :

திருமதி லெட்சுமி பிரியா அவர்கள் சுற்று வட்டார மக்களுக்கு என்ன பயன் என்று நாங்கள் வினவிய போது நீங்கள் இவ்வூரில் உள்ள பள்ளியின் உட்கட்டமைப்பு மற்றும் பள்ளி குழந்தைகளின் வளமேம்பாட்டிற்கு உதவுவதாக தெரிவித்தீர்கள். ஆனால் இந்த ஆஞ்சூர் செந்தாரப்பள்ளியிலுள்ள கிராம பொது மக்களுக்கு என்ன நல்லது செய்ய முடியும் என்று கூறவில்லை. ஏனென்றால், இந்த கிராமத்தை சுற்றி கிட்டதட்ட மூன்று ஆழ்துளை கிணறுகள் போடப்பட்டுள்ளது. அவை மூன்றிலிருந்து எடுக்கப்படும் நீரில் அளவுக்கு அதிகமான உப்பு தன்மையுள்ளது. மேலும், இப்பகுதி மக்களுக்கு RO அமைப்பு ஏற்படுத்தி அதன்மூலம் உப்புதன்மை நீங்கி முறையான குடிநீர் பெறும்வகையில் அமைத்து தருமாறு கேட்டுக்கொண்டார்

இதற்கு திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரியின் குத்தகைதாரர் அவர்கள் இந்த கிராமத்திற்கு RO அமைப்பானது ஏற்படுத்தி தரப்படும் என்று உறுதி கூறினார்.

கேள்வி எண் 2 :

திருமதி. லெட்சுமி பிரியா அவர்கள் ஏற்கனவே, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மூலம் நடத்தப்பட்ட குவாரிகளின் கருத்து கேட்பு கூட்டத்தில் கூறியிருந்த சமூக பொறுப்பு திட்ட நிதியைச் (Corporate Social Responsibility) சார்ந்த திட்டங்கள் ஏதும் செயல்படுத்தப்படவில்லை என வினவினார்.

இதற்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், ஓசூர் அவர்கள் இது குறித்து மனு கொடுக்கும் பட்சத்தில் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

4. திரு. முல்லைவேந்தன், அஞ்சூர் கிராமம்

திரு. முல்லைவேந்தன் அவர்கள் சமூக பொறுப்பு திட்ட நிதியானது (Corporate Social Responsibility) குறிப்பிட்ட ஓர் பள்ளிக்கே பயன்படுத்தப்பட்டால், மற்ற கிராம பொது மக்கள் பயன் பெற இயலாது. எனவே, அத்தொகையை ஊராட்சி மன்ற நிதிக்கு தரும் பட்சத்தில் அதனை முறையாக பங்கிட்டு பல்வேறு திட்டங்களுக்கு பயன்படுத்த ஏதுவாக அமையும் என கூறி, சமூக பொறுப்பு திட்ட நிதியை (Corporate Social Responsibility) ஊராட்சி மன்றத்திடம் வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

நிறுவனத்தின் சுற்றுச் சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு. S. சூர்யகுமார், ஆதி பூமி சுரங்கம் (ம) சுற்றுச்சூழல் தொழில்நுட்ப நிறுவனம், சேலம் அவர்கள் இக்குவாரியால் உத்தேசிக்கப்பட்ட சமூக பொறுப்பு திட்ட நிதி (Corporate Social Responsibility) தொகையான 5 லட்சத்தை பள்ளி உட்கட்டமைப்பு வசதிக்கும் இன்ன பிற செயல்திட்டத்திற்கும் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், குவாரி செயல்பாட்டிற்கு வந்த பிறகு தங்களின் கோரிக்கையான பரிசீலிக்கப்பட்டு கூடுதல் நலத்திட்டங்கள் ஊராட்சி மன்றம் மூலமாக செயல்படுத்தப்படும் என்று பதில் அளித்தார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவுசெய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னை-க்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டதுடன், இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெற்றப்பட்ட ஒரு மனுவானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு.பி.சையத்நாசர் பாபுலால் கிரே கிரானைட் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள கிரே கிரானைட் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தால் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல் மற்றும் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெற்றப்பட்ட மனு ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர்	மாவட்ட வருவாய் அலுவலர் கிருஷ்ணகிரி	மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி